நங்கவள்ளி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் – திருமதி. கொ. ரேவதி,

நி.மு.எண்.214/2023 நாள். 23.02.2024

பொருள்.. மனைப்பிரிவு வரன்முறை – சேலம் மாவட்டம் – நங்கவள்ளி பேரூராட்சி – நங்கவள்ளி கிராமம் – சர்வே எண். 144/73A, 7B2B, 9F, 153/1A, 2A, 3B, 3D–இல் 4.23 ஏக்கர் (17165.00 ச.மீ) யில் உள்ள நிலத்தில் மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது – மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை..
1. சேலம் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். SLM/FQK33WF0/16754/2023/TCP நாள்.28.12.2023
2. ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலக தான ஆவணம் எண். 7014/2023 நாள்.08.12.2023
3. நங்கவள்ளி பேரூராட்சி மன்ற தீர்மான எண். 126(6),நாள். 30.01.2024.
4. இவ்வலுவலக ந.க.எண்.214/2023 நாள்.01.02.2024.
5. நங்கவள்ளி பேரூராட்சி மன்ற தீர்மான எண்.135(6) நாள்.23.02.2024.

* * * * *

ஆணை:–

சேலம் மாவட்டம், நங்கவள்ளி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட நங்கவள்ளி கிராமம், சர்வே எண் 144/73A, 7B2B, 9F, 153/1A, 2A, 3B, 3D–இல் 4.23 ஏக்கர் (17165.00 ச.மீ) உள்ள நிலத்தில் மனைகளாக பிரிக்கப்பட்ட 1 முதல் 80 மனைகளுக்கு சேலம் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது கடிதத்தில், மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது இடங்கள் மற்றும் சாலைகள் மற்றும் பூங்காவை தானமாக பெற்று அவ்விடத்தில் தார்சாலை மற்றும் வடிகால் அமைக்கப்பட்டு அறிக்கை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது. அதன்படிக்கு, பார்வை 3–இல் காணும், இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பார்வை 2–இல் காணும் ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலக தான ஆவணம் மூலம் பொது இடம் மற்றும் சாலைகள் தானமாக பெறப்பட்டு, பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 1-இல் காணும், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களது கடிதத்தில், மேற்படி சர்வே எண். 144/73A, 7B2B, 9F, 153/1A, 2A, 3B, 3D-இல் 4.23 ஏக்கர் (17165.00 ச.மீ) உள்ள நிலத்தில் மனைகளாக பிரிக்கப்பட்ட 1 முதல் 80 மனைகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பார்வை 5-இல் காணும், இப்பேரூராட்சி மன்ற தீர்மானத்தில், மேற்படி மனைப்பிரிவை சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகரித்துள்ளது.

எனவே சேலம் மாவட்டம், நங்கவள்ளி பேரூராட்சி, நங்கவள்ளி கிராமம், சர்வே எண். 144/73A, 7B2B, 9F, 153/1A, 2A, 3B, 3D-இல் 4.23 ஏக்கர் (17165.00 ச.மீ) உள்ள நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 1 முதல் 80 மனைப்பிரிவுகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகரித்து இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. பேரூராட்சியின் அனுமதியின்றி வரைபடத்தில் உள்ளதற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனைகளை மேலும் உட்பிரிவு செய்தல் கூடாது.
2. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டகச்சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களை கட்ட பயன்படுத்தக்கூடாது.
3. மனுதாரர் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
4. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி மட்டுமே நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.
5. அரசு மற்றும் உள்ளாட்சி துறையின் மூலம் எதிர்காலத்தில் பிறப்பிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்
6. வழங்கப்பட்ட ஆவணம் மற்றும் தகவல்கள் எதுவும் பிற்காலத்தில் தவறு என தெரியவந்தாலோ, அல்லது அறியப்பட்டாலோ இவ்வாணை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

7. உள்ளாட்சி துறை மூலம் சட்டப்பூர்வமாக இறுதி ஒப்புதல் அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த தனிநபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றதின்முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய உள்ளாட்சி அமைப்பு பொருத்தமான அமைப்பல்ல.

8. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் இவ்வாணையின் நகலோடு நகர்ஊரரம்ப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும், மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

9. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்படவேண்டும்.

10. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கவேண்டும்.

11. நீதிமன்ற வழக்கு தேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லதக்கது அல்ல.

12. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலையின் குறுக்கே பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு இருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.

நங்கவள்ளி பேரூராட்சி சேலம் (மாவட்டம்) மேட்டூர் (வட்டம்)

செயல் அலுவலர்
நங்கவள்ளி பேரூராட்சி
சேலம் மாவட்டம்.

இணைப்பு – அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் – 1

பெறுநர்

திரு.கொழந்தைவேல்
க.எண்.13எ, பெரியகருப்பகோவில் தெரு
கண்ணாடிபாளையம்,
பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்.

நகல் –

1) சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்படுகிறது

2) சார்பதிவாளர், ஜலகண்டாபுரம் (தக்க நடவடிக்கைக்காக இம்மனைப்பிரிவின் வரைபடத்தினை அங்கீகரித்து இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது).